**இலங்கை சுனாமிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றுதல் ரீதியிலான கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவ செயற்திட்டம் - 2017**

---

இலங்கை சுனாமிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றுதல் ரீதியிலான கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2017 சனவரி 01 தொடக்கம் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூலை 23 ஆம் திகதிய ஜீஈஎவ்-எவ்எஸ்பி-5-எல்கே ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் நிரந்தர வாழ்வாதாரத்திற்கும் காலநிலை மாற்றங்களிலான பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் ஆதரவளிப்பதற்கான மீள்கட்டமைப்பு செயன்முறைக்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட உலகளாவிய ரீதியில் முக்கியத்துவமான உயிர்வாழ் சுற்றாடல் முறைமையின் பிரதான மீளமைப்பு, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,985 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 14.84 மில்லியனாக இருந்தது. அவற்றில் ஐ.அ.டொலர் 7.27 மில்லியன் உலகளாவிய சுற்றாடல் வசதி நிதியையும் ஐ.அ.டொலர் 7.08 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்தும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும் உலக பாதுகாப்புச் சங்கம் ஐ.அ.டொலர் 0.06 மில்லியனை நிதியளிப்பதற்கு இணங்கியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 55.90 மில்லியன் தொகையாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைளை 2010 செப்தெம்பர் 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 10 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2017 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஈ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

----------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 சனவரி 01 தொடக்கம் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிக்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் ஐஎவ்ஏடி வழிகாட்டிகள் என்பவற்றிற்கிணங்க 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

---------------------------------------------------------------------

### 3.1 நிதிகளின் பயன்பாடு

-----------------------------------

நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 செப்தெம்பர் 30 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 செப்தெம்பர் 30 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர்கள் | 14.41 | 1,929.10 | 200.00 | 0.28 | 43.27 | 6.29 | 851.18 |
| இலங்கை அரசாங்கம் | 0.43 | 55.90 | 15.30 | 0.10 | 15.05 | 0.30 | 44.60 |
| **மொத்தம்** | **14.84** | **1,985.00** | **215.30** | **0.38** | **58.32** | **6.59** | **895.78** |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், நன்கொடை முகவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,929.10 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 14.41 மில்லியன் தொகையான மொத்த மானியப் பெறுகைகளில் ரூபா 851.18 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.29 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீகச் செயலாற்றல்

முக்கியமான கரையோர உயிர்வாழ் சுற்றாடல் முறைமைகளின் செயற்திறனான மீளமைப்பிற்கும் நிலைபேறான முகாமைத்துவதிற்குமான சிறந்த நடைமுறைகளை அபிவிருத்தி செய்தலும் காட்சிப்படுத்துதலும், ஆக்கபூர்வமான உயிர்வாழ் சுற்றாடல் முறைமையின் மீளமைப்பையும் நிலைபேறான முகாமைத்துவத்தையும் முக்கியத்துவப்படுத்துதல், கரையோர சமூகத்தையும் கற்றல், மதிப்பீடு செய்தல் மற்றும் கடைபிடித்தல் முகாமைத்துவத்தையும் வலுவூட்டுதல் ஆகிய பிரதான நடவடிக்கைகளின் கீழ் நிதிகளை செயற்திட்டம் ஒதுக்கீடு செய்திருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் கீழ் 71 உப செயற்பாடுகள் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தால் முன்னேற்றப்பட்ட சில வசதிகள் செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காதமையை கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக செவ்வைகள் வெளிப்படுத்தியிருந்தன. அவற்றின் மீதான அவதானிப்புக்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடல்நீர் ஏரியை (Lagoon) எல்லை நிர்ணயித்துப் பாதுகாப்பதற்காக பொத்துவிலிலுள்ள கொட்டுகல் கடல்நீர் ஏரியை சுற்றி 700 தூண்களை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 1.60 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. 02 கிலோமீற்றர்கள் தூரத்தில் நிர்மாணிக்கப்பட்ட 68 தூண்களில் 05 தூண்கள் மாத்திரமே காணப்படுகின்றமை 2018 மார்ச் 27 இல் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பிரதேசத்தின் குடியிருப்பாளர்கள் கடல்நீர் ஏரி பிரதேசத்தில் அத்துமீறி நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்திருந்தனர்.

(ஆ) பொத்துவிலிலுள்ள கொட்டுகல் மணல் மலையை எல்லை நிர்ணயித்து பாதுகாப்பதற்காக செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டிருந்தது. 2014 இல் ரூபா 0.80 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 300 தூண்கள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் 2018 மார்ச் 27 வரையிலும் வளவில் காணப்பட்டமை கணக்காய்வுப் புலனாய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்படாத மணல் அகழ்விலிருந்து பொத்துவிலிலுள்ள மணல் மலையை பாதுகாப்பதற்காக ரூபா 6.10 மில்லியன் கிரயத்தில் 2014 ஆம் ஆண்டில் எல்லைச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றின் மீதான சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எல்லைச் சுவரின் முறையற்ற நிர்மாணம் காரணமாக அடுத்துள்ள மத்திய மருந்தகக் கட்டிடம் முழுமையாக நீரில் மூழ்கியிருந்ததுடன் நுழைவு வீதி பகுதியளவில் மணலால் மூடப்பட்டிருந்தது பிரதேசத்திலுள்ள மக்களிற்கு பாரதூரமான சிக்கல்களை விளைவித்திருந்தது.

(ஈ) கரையோரப் பிரதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக ரூபா 6.90 மில்லியன் கிரயத்தில் வாகரையிலுள்ள பனிச்சங்கேணியில் வெளிச்ச வீடு, விருந்தினர் மண்டம் மற்றும் கடல்நீர் ஏரி பூங்கா என்பவற்றுடன் கடல்நீர் ஏரி படகுச் சவாரிக்காக (lagoon safari) படகு இறங்குதுறையொன்றை செயற்திட்டம் நிர்மாணித்திருந்தது. சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுடாக சுயதொழில் வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக வாகரை பிரதேச செயலகத்தால் 2017 நவம்பர் 29 இல் கட்டிடங்கள் மற்றும் ஏனைய முன்னேற்ற வேலைகள் வாகரை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 மார்ச் 31 வரையிலும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள், சவாரி படகுகள் மற்றும் கடல்நீர் ஏரிப் பூங்கா என்பன பயன்படுத்தப்படாதிருந்தன.

(உ) ரூபா 3.40 மில்லியன் மொத்தக் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 26 இல் வாகரை பிரதேச செயலாளரிற்கு கையளிக்கப்பட்ட உயிர்வாழ் சுற்றாடல் பூங்கா (Eco Park) விளைவற்றிருந்ததுடன் புதர்கள் சூழ்ந்திருந்தமையை 2018 மார்ச் 04 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரீட்சிப்பு வெளிப்படுத்தியிருந்தது. ஆகையால் உயிரியல் சுற்றாடல் முறைமையை மீளமைத்து கடைப்பிடிப்பது தொடர்பாக பொதுமக்களிற்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக உயிர்வாழ் சுற்றாடல் பூங்கா ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 12.80 மில்லியன் மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2016 மார்ச் 26 இல் குச்சவெளி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட உர முற்றம் (Compost yard) நீர் விநியோகம் காணப்படாததன் காரணமாக 2018 மார்ச் 31 வரையிலும் அதில் நிறுவப்பட்ட இயந்திரங்கள் விளைவற்றிருந்தன.